திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே; பெரியகுளம், போடிநாயக்கனூர், நத்தம் கொட்டாம் பட்டி போன்ற வறட்சிப் பகுதிகளில் ஏராளமாக மாம்பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கனிகளில் சிறந்தது மாங்கனி என்று சொல்லப்படுகிறது. தனியார்கள் மாம்பழங்களை பத னிட்டு பானமாக கொடுக்கிறார்கள் ; ஆந்திர மாநிலத்தில் ஜெல்லி போன்று செய்து ஏராளமாக விற்பனை செய்கிறார்கள். ஆகவே வறட்சிப் பகுதிகளில் இருக்கின்ற விவசாயிகளை ஊக்கு விக்கின்ற வகையிலே, மாம்பழங்கள் உற்பத்தியை அதிகரிக்கும் விதத்திலே, இந்தப் பானம், ஜெல்லி போன்ற பதார்த்தங்களை உற்பத்தி செய்ய அரசு முயற்சிகள் எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர் களே, காதி மற்றும் கிராம வாரியத்தின்கீழ் 1980—81 ஆம் ஆண்டு 50 தனியார்கள் பழச்சாறு தொழிற்சாலைகளுக்கு ஒரு தொழிற்சாலைக்கு 10 ஆயிரம் ரூபாய் கடன் என்ற வகை யில் 5 லட்சம் கடனாக தர சம்மதித்துள்ளது. அந்தத் திட் டத்தின்படி இதுவரையில் 36 தொழிற்சாலைகளுக்கு 3 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் கடனாக அளித்திருக்கிறார்கள். இன்னும் தேவைப்பட்டால் காதி மற்றும் கிராம வாரியத்தின் வாயிலாக 14 தொழிற்சாலைகளை விரிவுப் படுத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : பேரவைத் தலைவர் அவர்களே; சேலத்து மாம்பழத்தைப் போன்று தென்காசி, கடையநல்லூர் போன்ற வட்டாரங்களிலே மிகுந்த ருசியுள்ள மாம்பழங்கள் அதிக மாக உற்பத்தியாகின்றன. தென்காசியிலிருந்து பம்பாய்க்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. தென்காசியிலே ஒரு பழச்சாறு தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர் களே; இல்லை.

திருப்புடைமருதூர் ஆலயத் திருப்பணி.

*வினா எண். 596—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் திருப்புடைமருதூர் ஆல யத் திருப்பணித் திட்டம் ஏதும் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

1981 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. ஆர் எம் வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம திருப்புடைமருதூர் அருள்மிகு நாறும்பு நாதசுவாமி ஆலயததின் திருப்பணி வேலைகள் செய்ய ரூ. 1,16,500 மற்றும் ரூ. 1,10,000 மதிப்பீட்டில் இரண்டு மதிப்பீடு கள் அங்கீகரிக்கப்பட்டு பிரதான ஆலயத்தின் மேல் தளம் பழுது பார்த்தல் வேலையின் ஒரு பகுதி மட்டும் நடந்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத திருப்புடைமருதூர் கோயில் திருப்பணி வேலையைத் துரிதப்படுத்த அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இந்த திருப்பணி வேலைகள் 1973 ஆம் ஆண்டிலே துவக்கப்பட்டு இருக்கின்றன. அந்த ஆலயத் திற்குப் போதுமான நிதிவசதி இல்லை. நிதி வசதிகளை மனத் திலே கொண்டு முதலிலே அவசியமாகச் செய்ய வேண்டிய சில முக்கிய வேலைகளை சுமார் 90 ஆயிரம் ரூபாய் செலவிற்குள்ளாக செய்ய இயலுமா என்பதைப் பற்றி அறநிலையத் துறையின் ஆணையர் பரிசீலத்துக் கொண்டிருக்கிறார்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இந்த திருப்புடைமருதூர் கோயிலினுடைய பக்தர்கள் தீண்டாமை கடை பிடிக்கப் படுவதால் இரண்டாயிரம் பக்தர்களுக்கு மேல் இந்து மதத்தில் பாதுகாப்பு இல்லை என்பதால் மதம் மாறிவிட்டார்கள். ஆகவே அப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்குவதற்கு அரசு நட வடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இந்த திருப்புடைமருதூர் அருள்மிகு நாறும்புநாதசுவாமி ஆல யத்தின் திருப்பணி வேலைகள் பற்றித்தான் கேள்வி. அதற்குத் தான் தகவல் என்னிடத்திலே இருக்கிறது. மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் சொல்கிறபோது இந்து மதத்திலிருந்து பாதுகாப் பிற்காக மதம் மாறியிருக்கிறார்கள் என்று தெரிவித்து இருக்கிறார்கள். தனிக் கேள்வி கேட்பார்களானால் தகவலை விவரமாகச் சேகரித்துத் தர முடியும்.

வனத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் முந்திரித் தோட்டங்கள்.

*வினா எண். 597—திரு. டி. மணி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வனத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் முந்திரி தோட்டங் களிலிருந்து உற்பத்தியாகும் முந்திரிக் கொட்டையைச் சேகரித்து குமரி மாவட்டத்திலிருக்கும் முந்திரி ஆலைகளுக்கு முறையாக விநியோகம் செய்யும் உத்தேசம் உண்டா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY